சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று மாலை

# திமுக எம்எல்ஏக்கள் கூட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடக்கிறது

**சென்னை, மார்ச் 14:** சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று மாலை திமுக எம்எல்ஏக்கள் கூட்டம் நடக்கிறது.

தமிழக சட்டப்பேரவையில் இன்று தமிழக அரசின் 2025-2026ம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. தொடர்ந்து நாளை வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. அதன் பிறகு மானியக் கோரிக்கை மீதான விவாதங்களும் நடைபெற உள்ளது. பட்ஜெட் கூட்டத் தொடர் தமிழக அரசின் நலத்திட்டங்களின் நிலை குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. மேலும் பட்ஜெட் கூட்டத் தொடரில் திமுக உறுப்பினர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும். எதிர்க்கட்சியினர் எழுப்பும் கேள்விகளுக்கு திமுக எம்எல்ஏக்கள் எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்பது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு ஆலோசனை வழங்க உள்ளார்.

இது தொடர்பாக அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் 14ம் தேதி (இன்று) மாலை 6.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கில்" நடைபெறும். இதில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

# தீ விபத்து தடுப்பு மற்றும் மீட்பு பணி ஒத்திகை..





தீ விபத்தை கையாளுவது குறித்து, ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் நேற்று செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. கட்டிடத்தில் தீப்பிடித்தால் அணைப்பது குறித்து தீயணைப்பு வீரர்கள் ஒத்திகையில் ஈடுபட்டனர். அடுத்த படம்: செவிலியர்கள், ஊழியர்களுக்கு தீயை அணைப்பது குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. கடைசி படம்: மெரினா கடலில் குளிக்கும்போது அலையில் சிக்கியவரை மீட்பு படையினர் மீட்டு வருவதுபோல ஒத்திகை நடந்தது.

மாநிலத்தின் வளர்ச்சி என்பது சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை,

# மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி அடிப்படையில் இருக்க வேண்டும்

## திட்டக்குழு கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை, மார்ச் 14:** மாநிலத்தின் வளர்ச்சி என்பது சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப் பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி அடிப்படையில் இருக்க வேண்டும் என்று மாநில திட்டக்குழுவின் ஆறாவது கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

தமிழ்நாடு முதல்வரும், மாநில திட்டக்குழுவின் தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமை செயலகத்தில், மாநில திட்டக்குழுவின் 6வது கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், மாநில திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட 'முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் ஏற்படும் தாக்கம் - இறுதி அறிக்கை', '10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு நடைமுறைகள் குறித்த ஆய்வு' மற்றும் 'சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்வியல் பற்றிய ஆய்வு' ஆகிய மூன்று ஆய்வறிக்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், இக்குழுவின் செயல்பாடுகள் பற்றியும், 5வது திட்டக்குழு கூட்டத்தில் முதல்வர் அறிவுரைகளின் படி மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இதில், மாநில திட்ட குழுவால் தயாரிக்கப்பட்டு 16.12.2024 அன்று முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளிக்கப்பட்ட கொள்கை வரைவுகள், அரசின் முன்னோடி திட்டங்கள் மீதான மதிப்பீட்டு ஆய்வுகள் மற்றும் இதர ஆய்வுகள் குறித்தும், ஆய்வு முடிவுகளின் விளைவாக, அரசின் முன்னோடித் திட்டங்களால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் அதனால் அடைந்துள்ள பயன்கள் குறித்தும் விளக்கினார்.

இந்த கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

மாநிலத்தின் வளர்ச்சி என்பது சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப் பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி அடிப்படையில் இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் மாநில திட்டக்குழுவால் செயல்படுத்தப்படும் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டம் தமிழ்நாட்டில் பின்தங்கிய வட்டாரங்கள் அனைத்தும் இணையாக வளர்ச்சி அடையும் நோக்குடன் செயல்படுத்த வேண்டும்.

இந்த 4 ஆண்டுகளில் மாநில திட்டக்குழு அளித்துள்ள பல்வேறு ஆய்வறிக்கைகள், கொள்கை வரைவுகள் ஆகியவை அரசு துறைகளால் செயல்படுத்தப்பட்டனவா என்பதையும், அரசு செயலர்களால் தங்கள் துறைகளில் இத்திட்டங்களின் பரிந்துரைகளை முறையாக செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும் இக்குழு கண்காணிக்க வேண்டும்.

கல்வி, மருத்துவம், சுகாதாரம், சத்துணவு மற்றும் வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்தோடு மாநில திட்டக்குழு விரைந்து செயல்பட்டு ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை வகுத்து, அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

இக்கூட்டத்தில், துணை முதல்வரும், மாநில திட்டக்குழுவின் அலுவல் சார் துணைத் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், தலைமை செயலாளர் முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை கூடுதல் தலைமை செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மை செயலாளர் உதயசந்திரன், திட்டக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம.சீனுவாசன், பேராசிரியர் சுல்தான் அகமது இஸ்மாயில், கே.தீனபந்து, எம்எல்ஏ எழிலன், மல்லிகா சீனிவாசன், மருத்துவர் ஜெ.அமலோற்பவநாதன், சித்த மருத்துவர் ஜி.சிவராமன், முனைவர் நர்த்தகி நடராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரவுடிகளை ஒழிக்க பிரத்யேக நடவடிக்கை எடுப்பதால் காழ்ப்புணர்ச்சி

# சென்னை போலீஸ் கமிஷனர் அருணுக்கு எதிரான மனு தள்ளுபடி

## உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, மார்ச் 14:** சென்னை காவல் ஆணையருக்கு எதிரான மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம், உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மதுரையைச் சேர்ந்த வழக்கறிஞர் ரமேஷ் தாக்கல் செய்த மனுவில், கிருஷ்ணகுமார் என்கிற வராகி மீதான வழக்குகளை சிபிசிஐடிக்கு மாற்றி உத்தரவிட்ட சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பில் வராகி மீது உள்நோக்கத்துடன் பொய் வழக்கு பதியப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

அதனால் காவல் துறை தலைமை இயக்குநர் உடனடியாக சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அருண் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், நீதிமன்றமே இது பொய்யான வழக்கு மற்றும் உள்நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட வழக்கு என்று கூறியுள்ளது. பொய்யான வழக்கை பதிவு செய்த காவல் துறை ஆணையர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு டிஜிபிக்கு உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

அப்போது காவல் துறை சார்பில் ஆஜரான மாநில தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, சென்னை மாநகர காவல்துறை ஆணையராக அருண் பொறுப்பேற்ற பிறகு ரவுடியிசத்தை முழுமையாக ஒழிக்க பிரத்யேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவை நுண்ணறிவு பிரிவில் உருவாக்கி தலைமறைவாக இருந்த பல ரவுடிகளை கைது செய்து பல்வேறு சமூக விரோத தடுப்பு முன்னெடுப்புகளை செய்துள்ளார். அதனால், காழ்ப்புணர்வோடு இப்படிப்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே, இதுபோன்ற வழக்குகளை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.



இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ஜி.கே.இளந்திரையன், வேறொரு வழக்கின் தீர்ப்பில் சொல்லப்பட்ட கருத்துகளை அடிப்படையாக கொண்டு, காவல் துறை ஆணையரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார்தாரர் கேட்க எந்த வித முகாந்திரமும் இல்லை.

சிபிசிஐடிக்கு மாற்றப்பட்ட வழக்குகளின் விசாரணையை நீதிமன்ற கருத்துகளின் தாக்கமின்றி தன்னிச்சையாக விசாரித்து குற்ற பத்திரிகை தாக்கல் செய்யும்போது, நீதிமன்றத்தின் தீர்ப்பின் முடிவின் மூலமாக மட்டுமே வழக்கு உள்நோக்கத்துடன் பதியப்பட்ட பொய் வழக்கா அல்லது உண்மையான வழக்கா என்று அறிய முடியும்.

எனவே, நீதிமன்றம் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் காவல் துறை ஆணையரின் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட முடியாது என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

சம்மனை கிழித்த விவகாரம்

### சீமான் வீட்டு பாதுகாவலர், பணியாளருக்கு ஜாமீன்

■ ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மார்ச் 14:** பாலியல் வன்கொடுமை வழக்கில், விசாரணைக்கு ஆஜராக கூறி நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கு வளசரவாக்கம் போலீசார் அனுப்பிய சம்மன் சீமான் வீட்டு கதவில் போலீசாரால் ஒட்டப்பட்டது. அப்போது சம்மனை கிழித்ததாக, அவரது பணியாளர் சுபாகர் மற்றும் பாதுகாவலர் அமல்ராஜ் ஆகியோரை நீலாங்கரை போலீசார் கைது செய்தனர்.

இந்த இருவரும் ஜாமீன் கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். மனுவில், அரசியல் உள்நோக்கில் எங்களை கைது செய்துள்ளனர். துப்பாக்கிக்கு உரிய அனுமதி இருப்பதால், ஆயுத தடுப்பு சட்ட பிரிவில் கைது செய்ய முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி சுந்தர் மோகன், இருவருக்கும் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். இருவரும் பூக்கடை காவல் நிலையத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என்று நீதிபதி நிபந்தனை விதித்தார்.

பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக இருக்கும்

# தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் ₹2.78 லட்சமாக அதிகரிக்கும்

## மாநில திட்டக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன் தகவல்

**சென்னை, மார்ச் 14:** தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 8 சதவீதமாக இருக்கும். தனி நபர் வருமானம் ₹2.78 லட்சமாக அதிகரிக்கும் என்று மாநில திட்டக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன் கூறினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில் மாநில திட்டக்குழுவின் சார்பில் தயாரிக்கப்பட்ட 'தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25'யை வெளியிட்டார். பின்னர் தமிழ்நாடு மாநில திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் சென்னை, தலைமை செயலகத்தில் தமிழ்நாடு பொருளாதார ஆய்வு அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் குறித்து நிருபர்களிடம் கூறியதாவது:

கார், தோல், காலணி, ஜவுளித்துறையில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உள்ளது. தமிழ்நாட்டில் மட்டும் தான் அனைவருக்குமான பொதுவிநியோக திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயி செய்துள்ள முதலீட்டின் அடிப்படையில் தான் பயிர் இழப்பீடு நிர்ணயம் செய்யப்படுகிறது. காலநிலை மாற்றத்தால் முகத்துவாரம் உள்ள பகுதிகளில் கடல்மட்டம் உயர்ந்து நிலத்தடி நீர் உப்பு நீராக மாறியுள்ளது. இதை தடுக்க முகத்துவாரம் உள்ள பகுதிகளில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.



மெட்ரோ ரயில் போன்ற பெரிய திட்டங்களுக்கு கடனுதவி பெற்றே செயல்படுத்த முடியும். ஒன்றிய அரசு முறையாக நிதியை வழங்கினால் கடனுதவி பெற வேண்டிய தேவை குறையும். கடன் என்பது பட்ஜெட்டின் ஒரு செயல்முறை, மாநிலத்தின் உற்பத்திக்கு ஏற்ப கடன் வாங்கலாம். உற்பத்தி மதிப்புக்கு கீழ்தான் கடன் வாங்கப்படுகிறது. ரிசர்வ் வங்கி விதிகளின்படியே கடன் வாங்க முடியும், அதை மீறி கடன் வாங்க முடியாது.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8% ஆக நீடிக்கும் என பொருளாதார ஆய்வறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில மக்கள்தொகையில் 31.8% உள்ள வடக்கு மண்டலம், GSDP-யில் 36.6% என்ற அதிகபட்ச பங்களிப்பை வழங்குகிறது. 22.8% மக்கள்தொகை கொண்ட மேற்கு மண்டலம் GSDP-யில் 29.6% பங்களிப்பை வழங்குகிறது. 20.5% மக்கள் தொகை பங்கைக் கொண்டுள்ளது தெற்கு மண்டலம் GSDPக்கு 18.8% பங்களிக்கிறது. கிழக்கு மண்டலம் 25.5% மக்கள்தொகையுடன் 15.1% என்ற மிகக் குறைந்த GSDP பங்கைக் கொண்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8 சதவிகிதமாக இருக்கும். தனி நபர் வருமானம் ₹2.78 லட்சமாக அதிகரிக்கும். தேசிய சராசரி தனிநபர் வருமானமான ₹1.69 லட்சத்தை காட்டிலும் 1.64 மடங்கு அதிகமாகும். தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் தேசிய சராசரியைவிட மேலே உள்ளது. தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு 4ம் இடம் வகிக்கிறது.

மாநில பொருளாதார வளர்ச்சி 8 சதவிகிதமாக நிலையாக இருக்கிறது. இந்த ஆண்டும் 8 சதவிகிதம் அல்லது அதற்கு மேலாக இருக்கும். வேறு சில மாநிலங்களும் பொருளாதார அறிக்கையை தயார் செய்கின்றன.

ஆனால் தமிழ்நாட்டில் இதுதான் முதன்முறை. இவ்வாறு அவர் கூறினார்.

### அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் தமிழ்நாடு...

இந்தியாவிலேயே அதிக கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் ஒன்றாக திகழும் தமிழ்நாடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இலவச கல்வி, விலையில்லா பாடநூல்கள், மதிய உணவு, முதலமைச்சரின் காலை உணவு திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களால் மாணவர்கள் ஈடுபாட்டுடன் தொடர்ந்து வகுப்புகளுக்கு செல்வது உறுதி செய்யப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 58,722 பள்ளிகளில் 1.29 கோடி மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். தொடக்க பள்ளிகளில் மாணவர் பதிவு 98.4 சதவீதமும், உயர்நிலை பள்ளிகளில் 97.5 சதவீதமும், மேல்நிலைப்பள்ளிகளில் 82.9 சதவீதமும் உள்ள நிலையில், தேசிய அளவில் இந்த விகிதம் முறையே 91.7, 77.4, 56.2 சதவீதமாக உள்ளது என்று ஜெயரஞ்சன் கூறினார்.

# மாணவர்களுக்கு பாராட்டு சான்று..



சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்ச்சியில், திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிறைவு போட்டிகளில் வெற்றி பெற்ற பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு அமைச்சர் கோவி.செழியன் பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசு தொகையை வழங்கினார். அருகில், உயர்கல்வித் துறை செயலாளர் சமயமூர்த்தி, தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற துணை தலைவர் விஜயகுமார், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் இன்னசென்ட் திவ்யா, மற்றும் உயர் அலுவலர்கள்.


pnb Housing Finance Limited Ghar Ki Baat

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

மும்பை கிளை: அலுவலகம் எண்- 2 & 3, தரைத்தளம், பாபா ஹவுஸ், மனை எண்.86, பி.எல்.பாலாஜி சாலை, டபிள்யூ.இ.எச்.மெட்ரோ நிலையம் அருகில், அந்தேரி (கிழக்கு), மும்பை-400093.

கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் பாகம் III, பிரிவு 13(2) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 3(1)-ன் கீழ் குறிப்பிட்ட நாள்படி திருத்தப்பட்ட அறிவிப்பு

இடம்: மும்பை, தேதி: 13.03.2025

pnb Housing Finance Limited

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துகளுக்காக)

இடம்: சென்னை, நாள்: 13.03.2025 — ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிட்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.

CIN: U67100TZ2014PTC020363

கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை - 400028.

மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com

அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91 93446 84194 / 98840 62068 / 99623 33307

[இணைப்பு - IV-A]

[பார்க்க விதி - 8(6) & 9(1)]

அசையாச் சொத்தின் மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("SARFAESI சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் எடெல்வெய்ஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் (EHFL) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை e-ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) (ஓம்காரா PS 33/2020-21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்) நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 30.03.2021 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி எடெல்வெய்ஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க OARPL நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. அதையடுத்து OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் ஒப்படைப்பு நிறுவனத்திடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுச் சொத்தின் நேரடி சுவாதீனத்தைக் கையகப்படுத்தியுள்ளார். இந்நிலையில் OARPL நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்தச் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் OARPL நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் SARFAESI சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)-இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் நாள், சுவாதீன நாள், குறைந்தபட்ச விலை, ஏல உயர்வுத் தொகை, டேவணித்தொகை (EMD), ஆய்வு நாள் மற்றும் நேரம் ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| கடன்தாரர் மற்றும் உப-கடன்தாரர் பெயர்: | திருமதி R. கயல்விழி மற்றும் திருமதி R கலையரசி | | |
| கடனீட்டுச் சொத்து விவரங்கள்: திருப்போரூர் சார்பதிவு அலுவலகத்தைச் சேர்ந்த 23.12.2013 நாளிட்ட விற்பனை ஆவண எண் 18134/2013-இன்படி திருமதி R. கயல்விழி, த/பெ. திரு. ராஜன் அவர்களின் சொத்து. மனை எண் 9A-இல் உள்ள 1305 சதுர அடிப் பரப்பளவு கொண்ட நிலத்தின் பிரிபடாப்பங்கு 520 சதுர அடி மற்றும் மேல்கட்டுமானப் பரப்பு ஏறக்குறைய 1167 சதுர அடி (பொதுப் பகுதி சேர்த்து), தரைத்தளம், வினோத் நகர் விரிவு 1, கேளம்பாக்கம், சென்னை 603 103, சர்வே எண் 1483/1B. அமைவிடம் - தையூர் கிராம வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கில்: B G மோகன்ராஜா மனை இடம், தெற்கில்: சர்வே எண் 1483/2A2, கிழக்கு: 20' அகல சாலை, மேற்கு: மனை எண் 10. | | | |
| சொத்தின் உரிமையாளர் | திருமதி R கயல்விழி | | |
| 13(2) அறிவிப்பு நாள் | கையக சுவாதீன நாள் | 12.03.2025 நாள்படி நிலுவைத்தொகை | |
| 01.03.2016 | 18.11.2017 | ரூ.1,20,96,435/- (ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நானூற்று முப்பத்தைந்து மட்டும்) | |
| குறைந்தபட்ச விலை | (EMD) (நிர்ணய விலை 10%) | ஏல உயர்வுத் தொகை | சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம் |
| ரூ.24,00,000/- (ரூபாய் இருபத்து நான்கு இலட்சம் மட்டும்) | ரூ.2,40,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) | ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) | மேலே குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்கள் மூலமாக அதிகாரப்பூர்வ அலுவலரிடம் முன் அனுமதி பெற்று. |
| கணக்கு விவரங்கள் | கணக்கு எண் 344905000929, பயனாளர் பெயர்: ஓம்காரா PS 22/2020-21 டிரஸ்ட், வங்கியின் பெயர்: ICICI வங்கி, கிளை: BKC மும்பை, IFSC குறியீடு: ICIC0003449. | | |
| மின்-ஏல நாள் மற்றும் நேரம்: | 16ஆம் நாள் ஏப்ரல் 2025 அன்று முற்பகல் 11:00 மணி முதல் நண்பகல் 12:00 மணி வரை | | |
| ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஏலப்புள்ளிக் கடிதம் / வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணம் / டேவணித்தொகைச் (EMD) சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் | 15ஆம் நாள் ஏப்ரல் 2025 அன்று மாலை 04:00 மணிக்குள். | | |

ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த (OARPL) நிறுவனத்தின் i.e.http://omkaraarc.com/auction.php எனும் இணையத்தளத்தில் அல்லது சேவை வழங்குநரின் i.e.https://www.bankeauctions.com எனும் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க.

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு

இந்த அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) அதனுடன் 9(1) ஆகியவற்றின்படியும் மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர்களுக்கு மேற்கண்ட நாளிலும் நேரத்திலும் மின்-ஏல முறையிலான ஏலம் / விற்பனை நடைபெற உள்ளது பற்றியும் விரும்பினால் மேலே கூறியபடி நிலுவைத் தொகைகளை 13.03.2025 வரையான மேல் வட்டி மற்றும் அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் விற்பனை முடிவதற்கு முன் எந்த நேரத்திலும் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தும் 15 (பதினைந்து) நாளுக்குக் குறையாத இன்றியமையா அறிவிப்பும் ஆகும். தொகையைச் செலுத்தத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்புரிமைக்கேற்ப கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)-இன் பரிந்துரைக்கப்பட்டுள்ள எந்த முறையின்படியும் விற்பனை செய்யப்படும்.

நாள்: 14.03.2025
இடம்: சென்னை

(ராஜேஷ் B. ஜுமானி)
கைப்பேசி எண்: 9884062068
அதிகாரப்பூர்வ அலுவலர்
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.
(ஓம்காரா PS 33/2020-21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)